Submitted before the Hon'ble Spl Judge/ CJM, Krishnagiri

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092365

1. District : கிருஷ்ணகிரி
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No.: 9/AC/2019
மு.த.அ. எண்
Date: 07.08.19
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to : 30.07.2019/16.45 hrs
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to : 01.08.2019/14.30 hrs
நேரம் வரை

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time :
நேரம் 07.08.2019/15.00 hrs

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம் –

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — அஞ்செட்டி சுமார் 100 கி.மீ தென்மேற்கே

Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி — உதவி பொறியாளர் அலுவலகம், TANGEDCo, அஞ்செட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. கோவிந்தராஜ்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : முனியப்பன்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 25 yr
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality :
நாட்டினம் இந்தியன்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம்
தொழில்
(g) Address : பனைகாரஜபுரம் கிராமம்,
முகவரி [illegible] அஞ்சல், அஞ்செட்டி வட்டம்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attacn separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. ராஜசேகர், வணிக ஆய்வாளர்,
உதவி பொறியாளர் அலுவலகம், TANGEDCo, அஞ்செட்டி,
கிருஷ்ணகிரி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

புகார்தாரரால் தாமதம்.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி த்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டின் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்குத் படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. கோவிந்தராஜ் 07/8/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 07/08/19
Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.08.19 / 19.00 hrs.

Name: பெயர் S. Gesor
Rank: நிலை கிராம நிர்வாக அலுவலர், VAO, ...

GCP-340-34(Type 3) ...

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/யுஊ/2019 சட்டப்பிரிவு 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

07.08.2019ம் தேதி மதியம் 15.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், பனை காமராஜர் கிராமத்தை சேர்ந்த திரு.கோவிந்தராஜ் த/பெ முனியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம்: அனுப்புநர், M.கோவிந்தராஜ், த/பெ முனியப்பன், பனை காமராஜபுரம் கிராமம், மரியாளம் அஞ்சல், அஞ்செட்டி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கிருஷ்ணகிரி, ஐயா, நான் அஞ்செட்டி வட்டம் பனைகாமராஜபுரத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். விவசாயம் தொழில் செய்துவருகிறேன். நான் S.S.L.C வரை படித்துள்ளேன். தமிழில் எழுத படிக்க தெரியும். என்னுடைய அப்பாவுக்கு சொந்தமாக எங்கள் ஊரில், சர்வே எண். 1034-ன் படி 2-3/4 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் போர்போட்டு பூந்தோட்டம் வைத்துள்ளேன். அந்த போர்வெல்லுருக்கு பூந்தோட்ட சர்வீஸ் கனக்ஷன் கேட்டு 30/07/2019-ம் தேதி அஞ்செட்டி மின்சார வாரிய A.E. அலுவலகத்திற்கு சென்று என்னுடைய அப்பா முனியப்பன் பெயரில் மனு கொடுத்தேன். அதை C.I. ராஜசேகர் என்பவர் வாங்கி வைத்துக்கொண்டு, இடத்தை வந்து பார்த்த பின்னர்தான் சொல்லமுடியும் என்றும், அன்று மாலையே எங்கள் ஊருக்கு வருவதாக சொல்லி என்னை அனுப்பிவிட்டார். பிறகு, அன்று மாலை சுமார் 4.45 மணிக்கு C.I. ராஜசேகர் எங்க ஊருக்கு வந்து இடத்தை பார்த்துவிட்டு, சர்வீஸ் கிடைக்க ஏற்பாடு செய்ய ரூபாய் 45,000/- தனக்கு தனியாக தரவேண்டும், இல்லையென்றால் எனக்கு சர்வீஸ் கிடைக்காது என்று சொன்னார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு மீண்டும், 01/08/2019ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு அஞ்செட்டி மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று, C.I. ராஜசேகரை பார்த்து, எங்களது சர்வீஸ் பற்றி கேட்டேன். உடனே அவர் என்னை, அந்த ஆபீசுக்கு வெளியே கூட்டிக்கொண்டு வந்து, சர்வீஸ் கிடைக்க ஏற்பாடு செய்ய ஏற்கனவே தான் கேட்ட பணம் ரூபாய் 45,000/- கொண்டுவந்துவிட்டாயா என்று கேட்டார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டடேன். அதில் குறைக்க

முடியாது, வேண்டுமென்றால் ரூபாய் 20,000/-த்தை அட்வான்சாக கொடு, ரூபாய் 25,000/-ஐ பிறகு கொடு என்று C.I. ராஜசேகர் சொன்னார். உடனே, விண்ணப்ப பதிவு கட்டணம் 50 ரூபாய் கட்டச்சொன்னார். நான் அந்த ஆபீஸ் கவுண்ட்டரில் 50 ரூபாய் விண்ணப்ப பதிவுகட்டணம் செலுத்தினேன். அந்த இரசீதை C.I. ராஜசேகர் அவர்களிடம் காண்பித்தேன். அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு, நான் கேட்ட பணத்தில் ரூபாய் 20,000/- அட்வான்சாக கொடுத்தால்தான் என்னுடைய விண்ணப்பத்தின்மீது நடவடிக்கை எடுத்து E.B சர்வீஸ் கிடைக்க ஏற்பாடு செய்யமுடியும் என்று C.I. ராஜசேகர் என்னிடம் உறுதியாக சொல்லிவிட்டார். ரூபாய் 20,000/-ஐ ரெடி பண்ணிகிட்டு, பணத்துடன் எப்போது வேண்டுமானாலும் அஞ்செட்டி E.B. ஆபீசுக்கு வந்து தன்னை பார்க்குமாறு அவர் சொன்னார். அவர் கேட்ட பணத்தை இதுநாள்வரை என்னால் ரெடிபண்ண முடியவில்லை. இன்றுதான் பணம் ரூபாய் 20,000/-ஐ ஏற்பாடு செய்யமுடிந்தது. அவருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து E.B. சர்வீஸ் வாங்க எனக்கு விருப்பமில்லை. C.I ராஜசேகர் லஞ்சமாக கேட்ட பணம் ரூபாய் 20,000/-த்துடன் நாளை அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, அவர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxx. M.கோவிந்தராஜ், 07.08.2019. மேற்படி எழுத்துமூலமான புகாரைப் பெற்று அதன் தன்மைப்படி இன்று 07.08.2019ம் தேதி மாலை 18.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 படிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.